## தேயிலை சக்தி நிதியம் - 2014

-----------------------------------------------------------------

தேயிலை சக்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 47 ஆம் இலக்க தேயிலை சக்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் 13(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேயிலை சக்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமை

கடந்த 5 ஆண்டுகளில் நிதியத்தின் நிதி விளைவுகளை கருத்திற் கொள்ளும் போது 2010 ஆம் ஆண்டில் ரூபா 28.52 மில்லியனான நட்ட நிலைமை 2012 ஆம் ஆண்டு தவிர ஏனைய ஆண்டுகளில் அதிகரித்து 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 127.82 மில்லியனாக இருந்தது. நிதியத்திற்கு 2005 ஆம் ஆண்டிற்கு முன்னர் திறைசேரியிடமிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 437.5 மில்லியனான மூலதன மானியம் 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு முரணாக வருடாந்தம் 10 சதவீதம் வருமானத்திற்கு சீராக்கப்பட்டமையால் மேற்படி நட்ட நிலைமையொன்று குறைத்து காண்பிப்பதற்கு காரணமாக இருந்ததுடன், சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 74 மில்லியன் வருமானத்திற்கு எடுத்தமையால் 2012 ஆம் ஆண்டின் போது இலாப தன்மையான நிலைமையொன்று தென்பட்டது.

நிதியத்தின் தேறிய சொத்துக்களை கருத்திற் கொள்ளும் போது 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 651.31 மில்லியனாக இருந்ததுடன், 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 55.41 மில்லியன் வரை குறைவடைந்து 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 72.42 மில்லியன் தேறிய பொறுப்பு நிலைமையொன்றாக மாறியிருந்தது. அவ்வாறே நிதியத்திற்குச் சொந்தமாக காணப்பட்ட தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகள் 2016 யூலை வரை நிறுத்தப்பட்டிருந்ததுடன், இரண்டு மாதங்களுக்கு ஊழியர் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் அரசின் அல்லது அரசின் வேறு நிதி ஒத்துழைப்பொன்றில்லாமல் நிதியத்தினை பேணிச்செல்வதில் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

#### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நியமமொன்று மூலம் தேவைப்படுத்தும் போது அல்லது அனுமதிக்கப்பட்டிருக்கையில் தவிர வருமானங்கள் மற்றும்

செலவினங்களுடன் ஈடுசெய்யக்கூடாத போதிலும், மீளாய்வாண்டிற்குரிய குத்தகை வருமானத்திலிருந்து பராமரிப்புச் செலவினம் கழித்து காண்பிக்கப்பட்டு தேறிய குத்தகை வருமானம் ரூபா 1,208,010 தொகை ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

மீள்மதிப்பீடு செய்யப்படும் சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி அதன் முகப்பெறுமதியுடன் பொருண்மையான அளவில் வேறுபடும் போது மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் நிலையான சொத்துக்கள் 2006 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டில் பொறிகள் மற்றும் இயந்திரங்களுக்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 588,624 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் முடிவுக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 263,052,111 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய மீதிகள் மற்றும் ரூபா 315,491,677 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பாக காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

02 வங்கிக் கணக்குகளுக்குரிய கையால் தயாரிக்கப்பட்டிருந்த காசேடு மற்றும் கணனி அச்சீட்டு காசேடு என்பவற்றிற்கு இடையே ரூபா 96,450 கூட்டுத்தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், அவ்வேறுபாடுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆம் ஆண்டின்போது புலத்கொஹூபிட்டிய மற்றும் பொத்துபிட்டிய தேயிலை தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 18,042,351 கூட்டுத்தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இத்தொழிற்சாலை நிர்மாணங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2005 ஆம் ஆண்டில் யட்டினுவர தொழிற்சாலை நிர்மாணம் தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அக்கம்பனியால் இத்தொழிற்சாலை நிர்மாணம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தமையால் செலுத்தப்பட்ட ரூபா 10,269,400 கூட்டுத்தொகையான முற்பணத்தை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டிலிருந்து ஹினிதும தேயிலை தொழிற்சாலை, கமுபோவிட்டியன தேயிலை கம்பனிக்கு குத்தகைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,661,828 தொகையை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேயிலை சக்தி நிதியத்திற்குரிய தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்காக சிறு தேயிலை தோட்டச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த லொறி வண்டிகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,099,029 ஆன கடன் மீதி 2013 ஆம் ஆண்டிலிருந்து அறவீடு செய்யப்படாமல் கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பதில் கடமை நியமனமொன்று நிரந்தர நியமனமொன்றை நியமிக்கும் வரை தற்காலிக பரிகாரமாகமொன்றாக இருந்த போதிலும், நிதியத்தின் கணக்காளர் பதவி மற்றும் புத்தகம் கட்டுனர் பதவிகளுக்காக பதில் கடமை அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் முறையே 2012 மற்றும் 2010 ஆம் ஆண்டிலிருந்து நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396 | 03 வங்கிக் கணக்குகளிற்குரித்தாக வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 179,138 கூட்டுத்தொகையான 17 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 127,823,734 பற்றாக்குறையாக

இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 59,365,788 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 68,457,946 அதாவது 115 சதவீதமான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. விற்பனைக் கிரயம் ரூபா 91,316,313 ஆல் குறைவாக இருந்த போதும், ஆண்டின் வருமானம் ரூபா 151,443,765 ஆல் குறைவடைந்தமை மேற்படி வீழ்ச்சிக்காக பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3.2 நிதியத்திற்கு எதிராக அல்லது நிதியத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 9,409,291 ஐ அறவிடுவது தொடர்பாக முகாமைத்துவம் 10 தொழிற்சாலைகளுக்கு எதிராக நீதிமன்றங்களில் 10 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், நிதியத்தின் விற்பனை பிரிவில் ரூபா 250,019 தொகையான பண மோசடியொன்று தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 19,211,584 தொகையை அறவிடுவது தொடர்பாக வெளிநிறுவனமொன்றுக்கு எதிராக வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன், 2014 யூன் 20 ஆந் திகதி நிதியத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், பிரதிவாதியால் 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதி கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

(இ) ஊழியரொருவரால் நிதியத்திற்கு எதிராக தொழில் நியாய சபையில் 4 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

# 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) தொழிற்சாலை இலாபம் / நட்டம்

நிதியத்திற்குச் சொந்தமாக 14 தொழிற்சாலைகள் காணப்பட்டதுடன் அதில் 10 தொழிற்சாலைகள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது செயற்பாட்டில் இருந்தன. அத்தொழிற்சாலைகளில் மீளாய்வாண்டின் போது அடைந்த நட்டம் (தலைமை அலுவலக செலவினம் தவிர்ந்த) ரூபா 115,482,937 ஆக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 69,730,592 ஆல் அதாவது 152 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை செயற்பாட்டு நிலைமையில் காணப்பட்ட தொழிற்சாலைகளினது இலாபம்/ நட்ட நிலைமைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**இலாப நட்ட நிலை**

**ரூபா 000**

| தொழிற்சாலை | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தெனியாய | (11,913) | (7,777) | (7,349) | (4,126) | 1,054 |
| வலகந்துவ | (14,068) | 731 | (2,297) | (3,312) | 558 |
| மாவரல | (10,279) | (10,229) | (6,108) | (3,653) | 158 |
| எல்பிட்டிய | (13,482) | (3,409) | (7,990) | (16,604) | (10,105) |
| ரைகம் கோரளை | (15,885) | (7,479) | (7,579) | 2,191 | 7,670 |
| கொத்மலை | (9,683) | (6,933) | (6,132) | (8,901) | (11,348) |
| கெப்பிட்டிபொல | (5,628) | 5,421 | (1,285) | (5,223) | 1,239 |
| பசறை | (1,769) | 5,772 | 6,640 | 2,345 | 6,342 |
| மஹாவலி | (10,054) | (13,079) | (899) | 245 | (2,738) |
| தெரணியகல | (22,722) | (8,770) | (3,989) | - | - |
| மொத்தம் | (115,483) | (45,752) | ( 36,988) | (37,038) | (7,170) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டில் வலஹந்துவ, கெப்பிட்டிபொல மற்றும் பசறை ஆகிய மூன்று தொழிற்சாலைகள் இலாபம் ஈட்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் 10 தொழிற்சாலைகள் நட்டத்தை அடைந்திருந்தன. 2010 ஆம் ஆண்டிலிருந்து கொத்மலை தேயிலை தொழிற்சாலையும் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தெரணியகல தேயிலை தொழிற்சாலையும் தொடரச்சியாக நட்டமடைந்து வந்தன.

(ii) தொழிற்சாலைகளின் நட்டத்தைக் குறைப்பதற்காக கூடுதலான கொழுந்து அளவொன்றைக் கொள்வனவு செய்யும் நோக்கில் தேயிலைக் கொழுந்திற்காக கூடிய விலை செலுத்தி தேயிலைக் கொழுந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இந்நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்துடன் மேலதிக கிரயமொன்றை மேற்கொள்ளப்பட்டமையால் கிரய அதிகரிப்பொன்று மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

## (ஆ) **தேயிலை உற்பத்தி**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | 2014 | 2013 | அதிகரிப்பு/ குறைவு | மாற்றத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | -------- | ------- | -------------- | ---------- |
| கொள்வனவு செய்யப்பட்ட பச்சை தேயிலைக் கொழுந்து (கிலோ கிராம்) | 8,084,257 | 10,118,528 | 2,034,271 | 20.10 |
| உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை அளவு (கிலோ கிராம்)) | 1,697,683 | 2,123,142 | 425,459 | 20.04 |
| 1 கிலோ கிராமிற்கான உற்பத்திக் கிரயம் ரூபா | 435.27 | 471.11 | 35.86 | 7.61 |
| 1 கிலோ கிராமிற்கான தேறிய சராசரி விற்பனை விலை ரூபா | 399.47 | 411.10 | 11.63 | 2.91 |
| காணப்பட்டவற்றின் அடிப்படையில் கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் கிலோவொன்றின் தேறிய சராசரி விற்பனை விலை ரூபா | 461.86 | 444.42 | | |

(i) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக தொழிற்சாலைகளின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பச்சை தேயிலை அளவு 2,034,271 கிலோ கிராம்களினால் குறைவடைந்திருந்ததுடன் தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தி 20.04 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. மாவரல, ரைகம்கோரல மற்றும் தெரணியகல தேயிலை தொழிற்சாலைகளில் உற்பத்தி அதிகரித்திருந்த போதிலும், ஏனைய அனைத்து தொழிற்சாலைகளிலும் 18 சதவீதம் முதல் 53 சதவீதம் வரையான வீச்சளவில் தேயிலை உற்பத்தி குறைவடைந்திருந்தது.

(ii) ஒரு கிலோ கிராமிற்கான உற்பத்திக் கிரயம் 7.61 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் தேறிய விற்பனை விலை 2.9 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. நிதியத்திற்குரிய அனைத்து தொழிற்சாலைகளிலும் ஒரு கிலோ கிராமிற்கான உற்பத்திக் கிரயத்தை விட தேறிய விற்பனை விலை குறைந்த பெறுமதியொன்றை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) முன்னைய 5 ஆண்டுகளில் கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் ஒரு கிலோ தேயிலையின் திரட்டிய சராசரி விலை நிதியத்தின் தொழிற்சாலைகளின் சராசரி விற்பனை விலையுடன் ஒப்பிடும் போது குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கைகளின் பிரகாரம் தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை உற்பத்தி பின்வருமாறு இருந்தது.

| தொழிற்சாலை | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட பச்சைத் தேயிலை கொள்வனவு (கிலோ கிராம்) | உள்ளபடியான தேயிலை கொள்வனவு (கிலோ கிராம்) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட தேயிலை உற்பத்தி (கிலோ கிராம்) | உள்ளபடியான தேயிலை உற்பத்தி (கிலோ கிராம்) | செயன் முன்னேற்றம் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| தெனியாய | 1,500,000 | 713,628 | 322,500 | 146,651 | 45.47 |
| வலகந்துவ | 1,500,000 | 683,708 | 322,500 | 141,814 | 43.97 |
| மாவரல | 1,110,000 | 267,805 | 238,650 | 55,382 | 23.21 |
| எல்பிட்டிய | 1,500,000 | 497,958 | 322,500 | 102,435 | 31.76 |
| ரைகம் கோரயை | 1,950,000 | 1,538,794 | 419,250 | 316,688 | 75.54 |
| தெரணியகல | 1,500,000 | 1,222,146 | 322,500 | 250,966 | 77.82 |
| கொத்மலை | 1,168,000 | 389,658 | 251,100 | 80,351 | 31.40 |
| கெப்பிட்டிபொல | 1,800,000 | 965,544 | 392,400 | 206,235 | 52.56 |
| பசறை | 1,650,000 | 948,651 | 363,000 | 209,097 | 57.60 |
| மஹாவலி | 1,800,000 | 856,455 | 387,000 | 188,064 | 48.60 |
| மொத்தம் | 15,478,000 | 8,084,257 | 3,341,400 | 1,697,683 | |

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 15,478,000 கிலோ கிராம் பச்சை தேயிலை கொழுந்து கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 8,084,257 கிலோ கிராம் தேயிலைக் கொழுந்து அதாவது 52.23 சதவீதமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆதலால் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட தேயிலை உற்பத்தி 3,341,400 கிலோ கிராம் ஆக இருந்த போதிலும் உள்ளபடியான உற்பத்தி 1,697,683 கிலோ கிராம்களாக அதாவது 50.81 சதவீதம் மாத்திரமாக இருந்தது. தொழிற்சாலைகளாக கருதும் போது செயலாற்றல் தெரணியகல மற்றும் ரைகம்கோரளை தொழிற்சாலைகள் தவிர 23 சதவீதத்திலிருந்து 58 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**(ஈ) உள்நாட்டு தேயிலை விற்பனைப் பிரிவு**

மீளாய்வாண்டின் தேயிலை விற்பனை பிரிவில் ரூபா 6,794,010 ஆன தேயிலை விற்பனையொன்றைக் கைப்பற்றுவதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான விற்பனை 2,848,418 ஆக இருந்ததுடன், அது இலக்கிடப்பட்ட அளவில் 42% ஆக இருந்தது.

**(உ) பசளைப் பிரிவு**

மீளாய்வாண்டின் இலக்கிடப்பட்ட பசளை விற்பனை 8,525 மெற்றிக் தொன்னாக இருந்த போதிலும், உள்ளபடியான விற்பனை 1,440 மெற்றிக் தொன்னாக அதாவது 16.89 சதவீதமாக இருந்தது.

**(ஊ) நலனோம்பல் பிரிவு**

தேயிலை சக்தி நிதியத்தின் மூலம் பராமரிக்கப்படும் சிறு தேயிலை தோட்ட சங்க அங்கத்தவர்களின் நலன்புரி நிதியத்திலிருந்து தேயிலை சக்தி தொழிற்சாலைகளில் காணப்படும் நிதித் தேவைப்பாட்டை நிறைவு செய்வதற்காக 2000 ஆம் ஆண்டிலிருந்து 2003 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 118,300,000 கடன்தொகையொன்று தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், தொழிற்சாலைகளினால் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அக்கடன் தொகைகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. தொழிற்சாலைப் பிரிவு தொடர்ச்சியான நட்டம்

அடைவதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை கடன்தொகை மற்றும் ரூபா 50,968,658 ஆன வட்டியைப் பெற்றுக்கொள்வதில் நிச்சயமற்ற நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

(எ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 94,425 பங்குதாரர்களிடமிருந்து ரூபா 206,014,150 பெறுமதியான பங்குதாரர்களுக்காக 2007 ஆம் ஆண்டின் பின்னர் மீளாய்வாண்டின் இறுதி வரை பங்கிலாபம் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அங்கத்துவ பங்குதாரர்களின் பங்கு மூலதனப் பெறுமதி உயர்வாக வைக்கப்பட்டமையால் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் பொருளாதார, சமூக நிலைத்திருத்தலை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடைய சிறந்த நிறுவனமொன்றாக இருத்தல் நிதியத்தின் நோக்கமாக இருந்த போதிலும், மேற்குறித்த விடயங்களின் பிரகாரம் அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 12 வருடகாலமாக நிதியத்தின் கீழ் செயற்படும் மஹாவலி அதிகாரசபைக்குரிய கொத்மலை தேயிலை தொழிற்சாலை தொடர்பாக முறையான குத்தகை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2007 யூன் 21 ஆந் திகதிய அமப/07/1906/309/019 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இத்தொழிற்சாலை மற்றும் அதற்குரிய காணி மற்றும் தோட்ட விடுதி என்பவற்றை கொடுப்பனவு முறையொன்றின் மூலம் கையேற்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2008 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 5,084,970 குத்தகை தொகையாகவும் தண்டப்பணமாகவும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்தின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 8,512,921 கிரயத்திலான சிறு தேயிலை தோட்ட சங்கங்களுக்குரிய 9 வாகனங்களின் உரித்தை நிதியத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முகாமைத்துவத்தின் பலவீனமான மேற்பார்வையொன்று காணப்பட்டமையின் காரணமாக பலாங்கொட தொழிற்சாலை மூடப்பட்டதன் பின்னர் 6 காணிப் பகுதிகளுக்குரிய 18.59 பேர்ச் அளவிலான காணி வெளித்தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன், இது தொடர்பில் பலாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

(ஈ) முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் ரூபா 1,403,526 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய பொருளாதார சேவைகள் கட்டணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 3,415,813 தொகைக்கு எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஆண்டின் இறுதியில் கொடுக்க வேண்டிய மீதியொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்திற்குரிய பசளை களஞ்சிய வளவில் பசளை கலவை செய்வதற்காக 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 2,197,447 தொகையான பசளை கலவை செய்யும் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், கலக்கும் செலவினம் மற்றும் அதற்காக எடுக்கும் காலம் கூடிய மட்டத்தில் காணப்பட்டமையால் அவ்வியந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) பலாங்கொடை தொழிற்சாலை மூடப்பட்டதன் பின்னர் கட்டிடங்கள் முறையாக பராமரிக்கப்படாததன் காரணமாக தொழிற்சாலைக்குரிய உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் மலசலகூட முறைமை என்பன சேதமடைந்து காணப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,350,000 பெறுமதியான பலாங்கொடை தொழிற்சாலை அமைந்துள்ள காணி மற்றும் ரூபா 10,000,000 பெறுமதியான கட்டிடங்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) நிதியத்தின் தலைமை அலுவலகத்தினதும் சகல தொழிற்சாலைகளினதும் திரட்டிய கணக்கினைத் தயாரிப்பதற்காக ரூபா 2,435,000 பெறுமதியான கணனி மென்பொருள் முறைமையொன்று 2010 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்குகளை தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக 2016 சனவரி 20 ஆந் திகதி வரையிலும் அது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4 வெளிப்படையான மோசடிகள்**

எல்பிட்டிய தேயிலை தொழிற்சாலையில் ரூபா 1,669,613 பெறுமதியான தேயிலை இருப்பு பற்றாக்குறை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 முறையாக பொறுப்பேற்கப்படாத காணிகளில் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமை**

தொழிற்சாலை கட்டிடங்களின் பெறுமதி ரூபா 62,391,999 ஆக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அக்கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் உரித்தினை கையேற்பதற்கு நிதியத்தினால் 2016 யூன் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 மனித வள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 90 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 60 ஆக இருந்தமையால் வெற்றிடங்கள் 30 ஆக இருந்ததுடன், அதில் பதவிநிலைத்தர உத்தியோகத்தர்கள் 14 ஆக இருந்தனர். அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலைப் பதவியணியினர் 199 ஆகவும் உள்ளபடியான தொழிற்சாலைப் பதவியணியினர் 79 ஆகவும் இருந்தமையால் வெற்றிடங்கள் 120 ஆக இருந்ததுடன், அதில் 19 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அதாவது 53 சதவீதம் வெற்றிடங்களாக காணப்பட்டனர்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு 2016 ஏப்ரல் 29 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும் வரைவு ஆண்டறிக்கை 2016 ஒக்தோபர் 20 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதியத்தின் பாதீட்டின் பிரகாரம், பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கிடையே 39 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) தொழிற்சாலைகளின் செயற்பாடு
(ஈ) சொத்துப் பயன்பாடு
(உ) வாகனக் கட்டுப்பாடு
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு